Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.309/2024

Dated 14-08-2025
Deposition of witness for : PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆரோக்கியமேரி | வயது | : | 48 |
| கணவர் பெயர் | : | விக்டர் பெர்ணான்டஸ் | தாலுக்கா | : | பூதலூர் |
| கிராமம் | : | விஷ்ணம்பேட்டை | தொழில் | : | கூலிவேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

**Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

2) ஆஜர் எதிரி என் மகன்.

3) என் கணவருக்கு போதையில் கீழே விழுந்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டது.

4) என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் என்ன எழுதி உள்ள என்று எனக்கு தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1

5)போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர்

வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரிக்கும் போது கடந்த 12.5.2024 ம் தேதி எதிரி மது அருந்திவிட்டு மாலை 6 மணியளவில் வீட்டிற்கு வந்து போனை காணவில்லை என்று நீங்கள்தான் யாரோ எடுத்து மறைத்து வைத்திருக்கிறிர்கள் என்று கேட்டார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

2) அதற்கு நாங்கள் போனை எடுக்க வில்லை என்று சொன்னதும் பீரோ சாவியை கொடு என்று கேட்டதால் நான் பயந்துகொண்டு சாவியை கொடுத்தாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

3) எதிரி பீரோவை திறந்தபோது எனது கணவர் மற்றும் எனது மூத்த மகன் ஏன்டா இங்க வர வீட்டை விட்டு வெளியே போடா என்று சத்தம் போட்டார்கள் என்றும் அதற்கு எதிரி நான் ஏன் வெளியே போகவேண்டும் என்று தள்ளு முள்ளு ஏற்பட்டதால் அதில் ரஞ்சித்துக்கு இடது கண்ணில் காயம் எற்பட்டது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

4) 21.5.2024 ம் தேதி நானும் என் மூத்தமகனும் வேலைக்கு சென்றுவிட்டோம் என்றும் அப்போது என் கணவர் ஊர் திருவிழா சம்ப,ந்தமாக மாலை 6 மணியளவில் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் விஷ்ணம்பேட்டை வடக்கு ஆதி திராவிடர் தெரு தாமஸ் வீட்டிற்கு அருகில் உள்ள பாலக்கட்டையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

5) அப்போது அங்கு வந்த எதிரி உன்னையும் உன் மகனையும் அடிக்கதான் இங்கு வந்தேன் என்று சொல்லி தகாத வார்த்தைகள் சொல்லி திட்டியதாகவும் அதை பார்த்த ஊர் மக்கள் சத்தம் போட்டார்கள் என்றும் பிறகு எனது கணவரை எதிரி திட்டியதால் ஊர் முக்கியஸ்தர்கள் அவனிடம் பேசாதே வீட்டிற்கு போ என்று சொன்னதால் என் கணவர் வீட்டிற்கு வருவதற்காக மணல்மேடுவிஸ்ணம் பேட்டை ரோட்டில் மோகன் வீட்டிற்கு அருகே உள்ள வேகத்தடைமுன்பு வந்தபோது நீ எங்கடா போற புண்டை மகனே என்று திட்டி கைலியில் மறைத்து வைத்திருந்த

கத்தியை எடுத்து எனது கணவரின் இடது பக்க கழுத்தில் குத்தி காயத்தை ஏற்படுத்தினார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

6) உடனே என் கணவரை நானும் என் மூத்தமகனும் திருக்காட்டுபள்ளி அரசு மருத்துவமணைக்கு அழைத்து சென்று உள்நோயாளியாக சேர்த்ததாகவும் அப்போது அவருக்கு சுய நினைவு இல்லாமல் மயக்கமாக இருந்ததால் முதல் உதவி சிசிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவகல்லூரி மருத்துவமணையில் சேர்த்து அங்கு என் கணவர் ஐ.சி.யு வார்டில் சிகிச்சையில் இருந்தார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

7) அப்போது திருக்காட்டுபள்ளி காவல் ஆய்வாளரிடம் என் மகன் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

8) ஆஜர் எதிரி என் மகன் என்பதால் அவரை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-கா.பூர்ண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்